*Subscription*
Inland: Rs. 50/- per year.
FOR ADVERTISEMENTS
*Apply to:*
"The Manager,
'Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QJ/J64/News/87*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 147 JAFFNA, FRIDAY, 27th MARCH, 1987 No. 13

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**UNDELIVERED ISSUES**
Please re-address all undelivered issues of the Morning Star to:-
The Manager,
"Morning Star",
Vaddukoddai.


## The New Bishop-Elect

We welcome the election by the Anglican Diocesan Council of Colombo on Thursday 19-3-87, of *The Ven J. J. Gnanapragasam* Archdeacon of Colombo as the twelfth Bishop of Colombo, succeeding the Rt Rev Swithin Fernando who retires after nine years of service as Bishop of the Diocese.

The Bishop-elect, a Trinitian had his university education at the University of Ceylon and his theological education at Bishops' College Calcutta.

We know that The Ven Gnanapragasam's appointment as Bishop of Colombo is in a sense formalisation of his key role in the administration of the Anglican Church since the time he became Archdeacon of Jaffna and later Archdeacon of the Colombo Diocese. Since 1978, he has been very closely associated with the administration of the Colombo Diocese when unprecedented events in political life in the country have kept the Church on edge.

It is an agonising period in the annals of the Christian Church in Sri Lanka for a person to be raised to the Episcopal chair. "In our age the road to holiness", said *Dag Hammerskjold*, Secretary of the UN from 1953 — 1961 "necessarily passes through the world of action". The complex issues which convulse Sri Lanka today are as much Church issues as they are political, economic as social issues.



Said Archbishop Desmond Tutu, the first Black leader of South Africa's multi-racial Anglican Church:—

"It is understandable, the reaction of the young. If I was young, I would have rejected Bisho Tutu long ago."

Bishop Laksman Wickremasinghe of revered memory, observed in one of his Pastoral Letters: "*as an under-Shepherd to the Cheef Shepherd the Bishop has always ot be where his Master is, come what may.*"

It is our hope that the Ven. J. J. Gnanapragasam when he is consecrated on Ascension Day, May 28th as the twelfth Bishop of Colombo will emulate the example of Bishop Lakshman who in his life and work stood *stiff* in his loyalty to his Master and in his independence and was able to say with Woodrow Wilson, the 27th President of the U. S A.

"*I go this way. Let any man go another way who pleases.*"

— C. E. R.

## Help the Helpless

By J. K. Retnanandam

*(Continued form our 13-3-87 issue)*

These facts have been brought out to arouse an awareness among those who have not done their bit by their unfortunate fellowmen. perhaps because they have not been directly hit and know not the rigours, that the unfortunates go through. It would be also good at this stage to dispel certain wrong notions propagate by designing individuals to escape from their responsibilities For instance, some believers in Karmic Law have been persuaded to leave the suffering alone, on the ground that their suffering is due to their own Karma, oblivious of the fact that Karma and Re-birth are not mere mechanical laws in which the sonl is caught up. but are the instruments for releasing souls from bondage to their bad karma, and that if they fail to make good for past lapses by performing good acts, they would be adding to their Sanchitha Karma and tighten their Karmic chains. Likewise there is another section of people who raise the misleading Biblical cry 'Am I my brother's keeper?" forgetting that God cursed Cain, the fratricide, who raised that protesting voice when he was asked where his murdered brother was.

This article was timed for the Christmas, New Year and Pongal festivities, when some of us spend freely without thought of the less fortunate, indulging in feasting, fun and frolic, and tillating tamashas etc. What is far worse is that some go in for excessive drinking, neglecting even their religious obligations, creating ugly scenes all around dne to intoxication. It is in reference to such people that Swami Shantanand remarked "Are we celebrating the advent of Christ, or are we crucifying Him?" An appeal is hereby made in the name of God and the suffering ones to reduce expenditure on such attractions and channel the Savings for much needed charity. There is an urgent need for rehabilitation — teaching skills to the refugees and under-privileged so that they can stand on their own feet instead of depending on the dole and charities As the saying goes "It is better to teach a man to catch fish than give him fish [illegible] funds are also needed [illegible] some refugee [illegible] incomdaee areas whose rations are being threatened to be stopped unless they return to their original [illegible] as Government consider these places safe now

It is earnestly hoped that this appeal will find a ready response among all sections of people inspired by the words from the Mahabaratha,

"Man is a member of Society. He is not exclusively for himself. He must therefore rise equal to the task. Responsibility is Providence's test of man."

The writer is unfortunately unable to quote from the Buddhist Scriptures But the point of responsibility that devolves on man towards his neighbour is sufficiently stressed by the Buddha's special emphasis on Compassion which embrances charity The Islamic 'zakath' is a perfect pointer to the importance of sharing wealth. There are many Christian injunctions on this point, some of which have been already referred to above But the best of them all is "Love your neighbour as yourself".

Finally, let me wind up with a Hindu Sannyasi — Swami Shantanand's prayer

I ask from Thee O Lord,
Grant thou me a Boon —
A heart to Love, a heart to give
and a heart to serve Thee,
O Lord.

## Congratulations

At the Speech Drama Examinations conducted by the Association of Teachers of Western Music Speech and Drama the following students of Jaffna obtained highest marks in the whole island

1. *Delani Darshyni Mahendran*
   Elementary Speech
   — 93 marks.
2. *Dharani Wignarajah*
   Grade III Effective Speech
   — 91 marks,
3. *Jasinthra Rajendra*
   Grade IV Effective Speech
   — 91 marks.
4. *Christopher Hiran Phillips*
   Grade I Effective Speech
   — 85 marks.

Youngest Candidate to obtain Highest margs in effective speech.

## Uduvil has done it again!

The annual Drill Squad Competition of the Manipay Circuit took place at the Inuvil Saiva Mangaiyar Vidyalaya premises on the 13th of March. The venue seemed like a carnival when the schools took their places and there was not only admiration but also pin drop silence when the different leaders took the field There was strong competition among the schools and in an atmosphere of tense anticipation the results were announced Both the teams from Uduvil had again been placed first.

**We. Done Uduviltes!!**

**Wanted**

Wanted for St. John's College Office a Shorthand-typist Knowledge of accounts an additional qualification. Male preferred. Apply before 17th April 1987 to:

MANAGER,
St. John's College,
Jaffna.

**THIRUMARAI ILLAM**

J. D. C. S. I. Centre for Sales of Bible and Relegious Pnblications.
*Agents for:* Ceylon Bible Society.
182, 1st Cross Street, Jaffna.
Telephone: 23574

Available
**Tamil Bible OV**
Leather Cover with or without Zip
Price Rs. 175/- & above

## IN MEMORIAM

IN TREASURED MEMORY OF

**Robert John Thurairajah**

Called to rest 5th April 1986

Thoughts of you, husband and father.
Happy mem'ries, a grateful heart.
Useful deeds to one another.
Richest lessons you did impart,
All of us today remember,
In your name, to do our part.

*With everliving adoration on the first anniversary of our physical parting*

Wife, children, grand children, and loved ones.

5, Dutch Road,
Chavakachcheri,

## IN MEMORIAM

TO THE GLORY OF GOD AND IN LOVING MEMORY OF

**Velupillai Nathaniel Aiyathurai**

Departed: 3rd April 1981
(On the 6th Anniversary)

*To live in hearts you leave behind is surely not to die.*
*A wonderful husband, father, friend and guide.*

Wife, children and all your loved ones.

[illegible]rch [illegible]ad.
[illegible]v k[illegible]ceeri

# உதயதாரகை

UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்.

மலர் 147] 27-3-87 [இதழ் 13

## பெத்லேகம் ஏன்? சிலுவை ஏன்?

அ. மிறுசோன்

(முற்றொடர்)

(2) சரியீடு (Satisfaction): மனிதன் பாவம் செய்யும்பொழுது மாதூய ஆண்டவரின் மாண்பினுக்கு ஊறு தேடி விடுகிறான். எனவே, ஆண்டவர் அவனை எவ்வாறு மீட்பது என்று சிந்தித்து, முடிவில் இந்தப்பாவிக்கும் சரியீடு தரும் வாய்ப்பினைத் தரவேண்டும் என்று தீர்மானித்துத் தம் சொந்த மைந்தனையே தந்து ஊறுபட்ட இறைவனின் மாண்பினைச் சரியீடு செய்துகொள்ள இயேசுவை அனுப்பினார். அப்பழுக்கற்ற இறைவனின் தூய்மை ஒருபுறம், முடைநாற்றம் வீசும் மனிதனின் பாவம் ஒருபுறம், மனிதனின் பாவத்தைப்போக்க ஆண்டவர் சிலுவையில் தொங்குகிறார். எனவே, மனிதனின் குறைகள் தீர்ந்துவிடுகின்றன.

இங்ஙனம் சிலுவையின் உட்பொருளைக் காட்டுகிறவர் தாமஸ் அக்வினாஸ்.

(3) போர்க்களம்: சிலுவை ஒரு போர்க்களம். இதில் நல்ல சக்திகளுக்கும், பொல்லாச் சக்திகளுக்கும் போர் நடைபெறுகின்றது. நல்ல பண்புகளை அறவே ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு பேய்க்கணங்கள் ஆர்ப்பரிக்கின்றன. ஆனால் இறைவன் இந்தப் போரில் உயிர்துறந்தும் இறுதியில் உயிர் பெறுகின்றார். பிசாசையும், பேய்ச் சக்திகளையும் இறுதியில் முறியடிக்கிறார். கிறிஸ்துவே இறுதியில் வாகை மாலை சூடுகிறார்.

இவ்வாறு சிலுவையின் உட்பொருளை சுவீடன் நாட்டு இறையியல் வல்லுனர் கஸ்டாஃப் அவுலேன் விளக்குகிறார்.

(4) பலி: இயற்கையாகவே மனிதன் இறைவனுக்குக் காணிக்கை தரவேண்டும் என்று விரும்புவான். தன்னுடைய மீறுதல்கள் மறையவும், இறைவனுடன் அறுந்துபோன பழைய உறவைப் புதுப்பிக்கவும் மனிதன் விரும்புகிறான். இதைப் பலியின் மூலம் வெளிப்படுத்துகிறான். சிலுவைப் பலி இதைத்தான் குறிப்பிடுகிறது. சிலுவைப்பலியைத் திரும்பத் திரும்பச் செலுத்த வேண்டியதில்லை. ஒரே பலி, பரிசுத்த பலி—இதனை இறைவன் மக்களின் ஈடேற்றத்திற்காகச் செய்து முடித்தார்.

இந்த விளக்கத்தை வின்சென்ட்டெயலர் என்ற இங்கிலாந்து இறையியல் வல்லுநர் தருகின்றார்.

(5) புது வாழ்வு: கைப்பிடி மண்ணை எடுத்து பொம்மைபோல் உருவம் செய்து ஜீவ மூச்சினை ஆண்டவர் படைப்பினைப் பூர்த்தி செய்தனர். மனிதன் ஜீவாத்துமாவானான். ஆனால் பாவம் குறுக்கிட்டு மனிதனின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கிவிட்டது. இனி மனிதன் புதுவாழ்வு பெற வேண்டுமாயின் அவன் இறைவனின் ஆற்றலை அபரிமிதமாகப் பெறவேண்டும். இந்த ஆற்றல் மனிதனுக்குக் கிடைக்கும். அப்பொழுது! இயேசுவின் பாடுகளில் அவன் பங்கெடுக்கும் பொழுது, உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஜீவ மூச்சினை ஊதும் பொழுது, பரிசுத்த ஆவியைப் பெறும் பொழுதுதான் இறைவனின் பிள்ளை என்பதை உணர்கின்றான்.

மனிதன் பாவிதான். ஆனால் அவன் புது நிலைக்குக் கடவுளால் உயர்த்தப்படுகின்றான்' இனி நான் அல்ல, கிறிஸ்துவே எல்லாம் என்பதை அறிந்துகொள்ளுகிறான்' தன் தீய குணத்தை மாற்றியமைத்துக் கொள்ளுகிறார்.

'கல்வாரி மலை ஓரம்-வாரும் பாவம் தீரும்''

இந்த விளக்கத்தை நம் நாட்டு வல்லுனர்கள் சக்கரை, செஞ்சையா, பிஷப் அப்பாசாமி முதலியோர் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

சிலுவை ஏன்? என்ற வினாவுடன் இக்கட்டுரை தொடங்கியது சிலுவையன்றி நான் இல்லை. இந்த சிலுவையின் உட்பொருள் நமக்கு எவ்வாறு புலப்படுகிறது?

## சிந்தனைக்கு விருந்து

**❋ மாண்டெஸ்க்யு**

தம்முடைய நூலைப்பற்றித் தம் நண்பரிடம் கூறியது: 'நீங்கள் என் நூலைச் சில மணிநேரங்களில் படித்து முடித்து விடுவீர்கள். ஆனால், இந்த நூலை எழுத நான் எடுத்துக் கொண்ட முயற்சி எனது கறுப்பு மயிரையே வெளுப்படையச் செய்துவிட்டது.

**❋ நெப்போலியன்**

பள்ளியில் படிக்கும்போது ஆசிரியர் மிகவும் கடினமான கணக்கு ஒன்றைப் போட்டார். தம் வகுப்பறையில் 72 மணி நேரம் அந்தக் கணக்கைச்செய்து விடைகண்டுபிடித்தார் அந்தக் கணக்கு இன்று வரையில் 'நெப்போலியன் கணக்கு' என்று அழைக்கப்படுகிறது.

லெந்து 4
மார்ச்சு 29—ஓய்வுநாளில் குணமாக்குதல்
ஏசா. 50 : 4 - 9
சங். 82.
உபா. 5 : 12 - 16
வெளி. 6 : 5 - 11
மா. 2 : 23 - 3 : 6
யோ. 9 : 13 - 41

## எங்கள தேசத்தின் குரல்

எங்கள் தேசத்தின் அழுகுரல்
உமக்கு கேட்கவில்லையா?
ஆண்டவா!
நாம்தேவனின் சாயலில்தான் பிறந்தோமா?
இன்று எமது பூமியில்
மலிவானபொருள் எதுவுமேயில்லை
மனித உயிர்களைத் தவிர...
நித்தமும் அவலங்கள் சுமந்தவராய்
ஏங்கியே வாழுகின்றோம்
எந்தவேளையிலும் மரணம் எமையழைக்கும்
இதற்குமுன்!...உமக்கு
அழைப்பு விடுகிறோம்—எம்
தேசத்தின் அழுகுரல்கேட்க,

உமது நித்திய தத்துவம்
சத்திய வேதம் உரைப்பது
விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
தேவனே எங்கள் பூமியில்
நீதியை நிலைநாட்டும்
பாதைதவறிய பாவமனிதர்க்கு
விசுவாசத்தின் வழியை திறவும்
எமது பூமியில் இன்னமும்
நீதி நீதிமன்றிலேதான்
நியாயமுங் கூடநிலை மறைவில்....
நேர்மைக்கு இடமேயில்லை!
ஏன்??
இந்தப் பூமியின் புத்திரர்
பாவமோனறன்றி வேறறியார்.

இறைவா இன்று!
பாவமகற்றும பரம்பொருளாய்
நீவந்து.. தேவநீதியை
இங்கே விளங்கப் பண்ணும்
எங்கள் தேசத்தின் தெருக்களில்
அழுகுரல்கள் மாற வழிசெய்ய
வாரும வருந்தியழைக்கிறோம்.

—வே. ப். தனேஸ்—

## மரணம்

### வே. அ. பொன்னுத்துரை
### பொ. ஜெபநேசன் (மகன்)

காங்கேசன்துறையில் வசிப்பவரும், தெல்லிப்பளைச் சபையைச் சேர்ந்தவருமாகிய வேலுப்பிள்ளை அருளம்பலம் பொன்னுத்துரை அவர்கள் கடந்த சனிக்கிழமை (21-3-87) காலமாகிவிட்டார்.

இவரின் மூத்த மகன் ஜெபநேசன் கடந்த ஞாயிறு 2?-3-87 காலை காலமானார்.

இவர்கள் இருவரும் காங்கேசன் கூட்டுத் தாபனத்தில் பலஆண்டுகளாகப் பணியாற்றி வந்தனர்.

இவர்களின் இறுதியாராதனை காங்கேசன்துறையில் உள்ள இவர்களது இல்லத்தில் கடந்த ஞாயிறு (22-3-87) பி. ப. 2-00 மணியளவில் சபைப் போதகர் அருள்திரு. T. S. பிரேமராஜா அவர்களது தலைமையில், மயிலிட்டி கத்தோலிக்கச் சபைக்குரு ஆச்சிரம பிரதம சேவக் வண சாம் அல்பிறட் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டது. வண D. C. இரத்தினசிங்கம் காலஞ்சென்ற திரு. பொன்னுத்துரை, அவரது மகன் திரு ஜெபநேசன் ஆகியோர்க்கு இரங்கலுரை வழங்கினார். அருள்திரு. D.R. அம்பலவாணர் அருளுரை ஆற்றி அனைவர்க்கும் ஆறுதல் வழங்கினார். காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியரில் இருவர் இரங்கலுரை வழங்கினர். தெல்லிப்பளைச்சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்க ஆராதனை சபைப்போதகரால் நடத்தப்பட்டது.

## தாயின் முயற்சியால் உயர்ந்த தனயன்

எடிசனுடைய ஆசிரியர், எடிசனுக்கு மூளை இல்லை என்றார். மருத்துவர்கள் சோதித்துப் பார்த்து, எடிசனின் மூளை அமைப்பு இயற்கைக்கு விரோதமாக இருக்கிறது, சீக்கிரம் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்றனர். ஆனால், அவர் தாயோ, எடிசனைப் 'பெரியவனாக்குவேன்' என்ற உறுதியோடு அவருக்கு, அதிக முயற்சியுடன், கல்வி கற்பித்தாள். அவளது முயற்சியால் எடிசன் கல்வியில் தேர்ந்து, ஒரு தலைசிறந்த மேதையானார்.

அறிவியல் உலகில் மாபெரும் புகழ்பெற்ற எடிசன் கூறியது! 'மனித ஜாதி கடன்பட்டிருப்பது மூளைக்கன்று, முயற்சிக்கே. கடவுள் வரங்களை விற்கவே செய்கிறார், முயற்சியே அவற்றின் விலை என்பவே.

## சோம்பலுக்கு இடந்தரலாகாது

சோம்பல் மிகுந்தவன் வாழ்வில் முன்னேற்றங் காணவே முடியாது. "சந்தேகம், கவலை, மனச்சோர்வு, கோபம், ஏக்கம் ஆகியன இப் பிசாசுக்கள், மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கி நிற்கின்றன. அவன் சோம்பலுக்கு இடங்கொடுக்கும் போது, இவையனைத்தும் அவனை வந்து தாக்குகின்றன. ஒருவன் முயற்சியோடு உழைத்தால், இப் பிசாசுக்கள் அவனைத் தாக்கமுடியாது. ஒரு வேலையில் முழுவதுமாக ஈடுபட்டால், எந்தப் பிசாசும் பக்கத்தில் நெருங்காது. மிஞ்சி வந்தால் தூரத்திலிருந்து உறுமும்," என்றார் அறிஞர் கார்லைல்.

கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் ஒரு பாடல் எழுதினார்: குயிலின் சிறப்பியல்பை விளக்க நல்ல அடைமொழி ஒன்றைத் தேடினார். கிடைக்கவில்லை. இப்படியே பல ஆண்டுகள் கடந்தன. அந்த ஓர் அடைமொழி கிடைக்காததால் பாடல் முழுமை பெறவில்லை' பாதியிலேயே நிறுத்திவிட்டார்.

நாற்பத்துமூன்று ஆண்டுகளின் பின்தான் "Wandering Voice" என்ற அடைமொழி கிடைத்தது. மகிழ்ச்சியுடன் தன் பாடலை எழுதி முடித்தார். 43 ஆண்டுகள் முயன்று வெற்றி பெற்றார். "எதுவும் தாமாக வருவதில்லை ஏதேனும் வந்தாலும் நல்ல விடயங்கள் எதுவும் தாமாக வருவதில்லை. எல்லாவற்றையும் தேடியேயாகவேண்டும்." என்றார் அறிஞர் பக்ஸ்டன்.

பலவீனருடைய பாதையில் தடையாக இருக்கும் கல், பலமுற்றவர்களுடைய பாதையில் படிக்கல்லாக மாறிவிடும். "முயற்சி மெய்வருத்த கூலி தரும்" என்ற வள்ளுவர் மொழி சிந்தனைக்குரியது.

மணி வாக்கு
உள்ளத்தில் ஒளியுண்டாயின்
வாக்கினிலே இனிமையுண்டாகும்
— பாரதி

# எங்கள் கருத்து

## கவலைப்படாதீர்- நம்பிக்கையோடு செயற்படுங்கள்!

இன்று கவலையும் கலக்கமும் நிறைந்த உள்ளத்தோடு, நம்மிற் பெரும்பாலானோர் தவிக்கின்றனர் சோர்பும் தளர்ச்சியுமுற்றவர்களாய், சலிப்பும் வெறுப்புணர்ச்சியும் மிகுந்தவர்களாய் முடங்கிக் கிடக்கும் பலரை நாம் நாள் தோறும் சந்திக்கிறோம். நாள்தோறும் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் அக்கிரமங்களையும் அட்டூழியங்களையும் காணும் நாமும் பலவேளைகளில் நம்பிக்கை யிழந்தவர்களாய் காணப்படுகிறோம்.

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் போராளிகளின் வலிமை குன்றி வருவதுபோல் தோன்றுகிறதே எனப் பலர் பீதியடைந்திருக்கின்றனர் இத்தகைய சூழ்நிலையில், நம்பிக்கையின ஒளியைப் பரப்பச் செய்வது கிறிஸதவர்களாகிய நமகடமை 'நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை" (2 கொ. 4 : 1) என்பதை நாம காட்டல் வேணடும்.

துன்பங்களின் மத்தியில் திடமனதோடிருந்து இறுதிவரை நம்பிக்கையோடு செயலாற்றிய பவுலடியார் 'எல்லாப்பககத்திலிருந்தும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனம் முறிவதில்லை; துன்பப் படுத்தப் பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிநது போறதில்லை (2 கொ. 4 : 8, 9 என்று கூறுவதைக் கவனியுங்கள். ஆகவே, இறைவன் தமிழ் மக்களைக் கைவிடார் என்ற நமபிக்கையில் மக்கள் உறுதியாய் நிலைக்கத்தக்க செயல்களை நாம் செயற்படுத்தவேண்டும்.

இறைவன் நமது போராளிகள் மூலமாகவும் இந்தியா மூலமாகவும், தமிழரின் விடுதலைக்காக ஆச்சரியமாகச் செயலாற்றி வருகிறார் என்பதை நாம் மறுக்க முடியாது. இடைக்கிடை தோல்விகள் நேரிடினும், அத்தோல்விகளையே வெற்றிக்கான படிக்கற்களாக மாற்றியிருககிறார்கள் இந்தியா இலங்கை அரசின் உறுதியற்ற போக்கைக்கண்டும் நீடிய பொறுமையுடன் செயலாற்றி வருகிறது. இதனைக்கவனிககும்போது இறைவன் ஆற்றி வரும செயலகளை நாம் அவதானிக்க முடிகிறது.

சேனைகளின் கர்த்தராகிய கடவுள், தமது மக்கள் அநியாயமாய் அழிக்கப்படுவதைக் கண்டு பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார். அன்று விடுதலைப பயணத்தில் சென்று கொண்டிருந்த இஸ்ரவேல் மககளை, பார்வோன் தனது சேனையுடன் துரத்திக்கொண்டு வந்தான். இதனைக் கண்ட இஸ்ரவேல் மக்கள் பயந்தனர், கலங்கினர் நமபிக்கையிழந்து நின்றனர். இதனைக்கண்ட மோசே- 'கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சுமமாயிருஙகள்' (யாத 14: 14, என்று அம் மக்களுக்கு நமபிக்கை யூட்டினன்.

ஆம், இறைவனை நாம் நமப வேண்டும். அரசியல் தீர்வு என்று ஒருபுறம கூறிககொணடு, மறு புறம தனது இராணுவத்தால் தமிழ் மக்களை அடககி ஒடுககி அழிதது வரும் இலங்கைஅரசு, கூடிய விரைவில் தான செய்துவரும் பாவச்செயல்களுக்காக, எல்லாம் வல்ல இறைவனுககு விடையளிக்க வேண்டிய காலம் நெருங்கி வருகிறது. அவர்கள் தங்கள் போக்கை மாற்றுவிடின், அதனை மாற்றச்செய்வார் இறைவன் இதனை நம் மக்கள் நமபவேண்டும்.

விடுதலைப் போராட்டங்கள் இந் நாட்டில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன. தான் படைத்த மக்கள் சுதந்திரமாய் வாழவேண்டு மென்பதே இறைவனின் விருப்பம் ஆகவே, நாம் கலங்காமல், ஒடுக்கப்படுகிறவர்களின் சார்பில்தான் இறைவன் செயலாற்றி வருகிறார் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடே செயற்பட வேண்டும்.

ஆண்டவருடைய நிழல் சில வேளைகளில் இருள் படிந்ததாகத் தோன்றினாலும், அதில் பயப்படாமல் தஞ்சம் புகுவோம் வருக கவலைகள் மேகம்போல் நம்மேல் இறங்கி வந்து நம்மை மூடுவதாகத் தோன்றலாம். அத்தகு நேரத்தில் மறுரூபமலையில் சீடர்களுக்கு அவர் தம் மகிமையை மேகப் படலங்களின் வழியே வெளிப் படுத்தியதைப் போல் நமக்கும் வெளிப்படுத்துவார். அவருடைய மகிமையைக் காணும்போது நமது கலக்கம் மறைந்து சமாதானம் நம்மில் நிலைகதம்.

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும்என்று. உன்மேல் தமிழ்மக்கள் மேல்) மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா. 54:10)

## வாழ்வளிக்கும் நீர்

(முந்தொடர்)

எனவே கிறிஸ்துவாகிய 'நீர்' நமக்கு உணவூட்டி, மனுக்குலத்திற்கும், தம் படைப்பனைத்திற்கும் சுகமளிக்கிறார் என்பது, இந்த வசனங்கள் மூலம் வெளியாகிறது. எனவே போரின் அச்சத்தை எதிர் நோக்கும் போரின் அச்சத்தினால் தவிக்க முடியாது என்றும், எல்லா நாட்டிற்கும் சுகமும் வாழ்வும் அளிக்கும் தண்ணீராகிய இயேசு கிறிஸ்துவால் மட்டும் தான் முடியும் என்று சொல்ல இயலுமா?

ஆட்டுக்குட்டியானவரிடமிருந்து ஓடிவரும் வாழ்வளிக்கும் ஜீவநதி என்ற உவமை உலக சமாதானத்திற்காகத் தம் உயிரையே காயப்பட்ட, பலியான ஆட்டுக்குட்டியானவர் அளிக்கின்றார் என்று சொல்ல முடியும். இச் செய்தி சமாதானத்தைப் பற்றி முறை தம் பல இடங்களில் இன்று எப்படிச் செல்லும்?

ஜீவதண்ணீர் சுகமளிக்கின்றது; முழுமையாக்குகிறது. அதோடு அந்நீர் எல்லா அசுத்தங்களையும் நீக்குவதால் (வச.௨.) அந்த ஆற்றிற்கு (நதியின்) (இயேசு சுத்தமளிக்கும் சக்தியும் இருப்பதை அறிகின்றோம்.

சாபமான எல்லாவற்றையும் நீக்கி ஒரு புது நன்மையால் நிறைந்த நாட்டை உருவாக்குவதில் அந்த நதி தீவிரமாக வேலை செய்கிறது அதே உருவகம், திருமுழுக்கிலும் துவக்க வழிபாட்டிலும், முக்கியமாக பாவத்தைக் கழுவி கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு அடையும் நிலை நீரின் மூலமாகக் காட்டப்படுவதால் உபயோகிக்கப் படுகிறது. அது சுத்தம் செய்வது மட்டுமல்ல, நதியால் சுத்தம் செய்யப்பட்ட இடம் ஆட்டுக்குட்டியானவரின (அரியணை) சிமாசனம் இருக்கும் இடமுமாகும் என்று வசனம விவரிக்கிறது.

அரியணை அங்கு இருப்பதின் காரணம் இறந்து மனுக்குலமனைத்திற்கும் விரோதமானவரை வென்று வெற்றி பெற்று, புதுக் காலத்தை நம்பிக்கை உள்ளோருக்கு அளிக்கிறார்.

இந்த ஒப்புரவாகுதலின் வாழ்வில் மீட்கபபட்ட மக்கள ஆட்டுக்குட்டியானவரின் முகத்தைப் பயமின்றிப் பார்க்கின்றனர். கடவுளாகிய ஆண்டவரே அவர்கள் மீது ஒளி வீசுவதில்' பழைய எல்லா தண்ணீர் (வெள்ளம், புயல், அசுத்தம) மாறறப்பட்டது.

இயேசுவாகிய ஜீவதண்ணீரோடு ஏற்படும நெருங்கிய ஐக்கியம் 'அவரோடு முகம முகமாய் என்று சித்தரிக்கக் காட்டப்படுகிறது அது இன்னும் படரூபமாய் விவரிககபடுமசமயம, அவருடைய திருப்பெயரை அவர்கள் நெற்றியில் (மற்றுமொரு திருமுழுக்கின் இணைப்பு) தரிககப் பட்டிருப்பார்கள் என்று நிச்சயப் படுத்தப் படுகிறது.

ஆதியாகமத்தில் காட்டப் பட்டிருப்பது போல மனுக்குலமனைத்தும் பாவமற்ற நிலைக்கு இப்பொழுது திருப்பப்பட்டு, அந்த நிறைவான வாழ்வு அந்த முழு ஒளியிலிருந்து (அவர்களுககு சூரிய விளக்கு ஒளி தேவையில்லை) பெற்றவராக இருப்பார்களென்று காட்டப்படுகிறது.

இந்த உலகின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் மத்தியில தத்தளிக்கும் நமக்கு இந்த வசனம் என்ன சொல்கிறது? இந்த வெளிப்படுத்தல் வசனங்கள் நாம் தப்பிச் செல்லும் ஓர் உயர்ந்த இடமாக மட்டும் சித்திரிக்கப் படுகிறதா?

திருச்சபை மனித நிலைமையையும் கிறிஸ்துவின் வாக்குத்தத்தோடு கூடிய கடவுளின் சக்தியையும ஏற்றுக் கொண்டதாக இருக்கிறது. இந்த வாக்குத் தத்தம் அவருடைய வெள்ளியின் மூலமாயும் அவருடைய ஆவியின் சக்தியின் மூலமாகவும் நமக்கு அளிக்கப்படுகிறது.

### தியானம்

## "உம்முடைய அரசு வருவதாக"

(மத். 6:10)

இச்சிறு செபத்தில் பலமான விண்ணப்பங்கள் அடங்கியுள்ளன கடவுளின் ஆன்ம ஆட்சி உலகத்தில் பரவ மக்களது உள்ளமும் வாழ்க்கையும் அவ்வாட்சிக்குட்பட, உலக இராஜ்யங்கள் அவரது ஆளுகைக்கு உள்ளாக, உலகமக்கள் பாவங்களைக் களைந்து நற்சீர் பொருந்த, கிறிஸ்துவை அரசும் சிரசுமாக்கி அவருக்கு அடிபணிய- இவ்வளவும், இவை போன்றனவுமான விண்ணப்பங்கள் அடங்கியுள்ளன.

நம்மைப் பரலோகத்திற்கு ஏற்றிச் செல்லுவதற்கல்ல, பரலோகத்தை நம்மிடத்திற்கும் நமக்குள்ளும் கொண்டுவரவே நாம் விண்ணப்பிக்கிறோம். இந்த விண்ணப்பத்தை உச்சரிக்கும்போதெல்லாம் நம்மை விட்டுப்போட்டு, மற்றவர்களையே நினைக்கிறோம். உமது இராஜ்யம் (அரசு) அங்கே, அவர்களிடம் வருக என்றே செபித்தலாகிறது.

நாம் வசிக்கும் சின்ன உலகமே, அதாவது நாமும் நமது வாழ்க்கையுமே முதலாவது அவருடைய இராஜ்யமாதல் வேண்டும். தெய்வ இராஜ்யம் நமக்குள் வந்திடாதா?

வெண்ணெயைக் கையில் கொண்டு
நெய்க்கலையும் பேதைபோல்
விண்ணரசு செங்கோவென்று தேடித் திரிந்
தலைந்தேன்
இராச்சியம் வருகவென நித்தநித்தமுமே
செபித்தும்
ஆச்சரிய மிதுவென் அருகிலிருந்தே யப்பா
கண்ணைமறைத்ததேது? கோட்டைப்போல்
தடுத்ததேது?
விண்ணின்பம் விரவாய்ப் பருக ஏலாது
போனதேனோ?
அண்மையிருந்த பரம் காணுமலேமயக்கப்
பண்ணிய தென்கொடும் பாவமேதானோ?
மின்னுஞ் சுரர் துதிக்கும் இன்பத்தில்
நானுஞ்சேர
இன்னும் மதிகலங்கி வீணாடிநானுந்
தரியேன்
தன்னயமென்னுங் கோட்டைதான்
தகர்த்தே தெரியுமேன்
மன்னு இயேசுநாதா உன்னுளே
உட்புகுவேன்

**EDITORIAL**

## Jaffna, Geneva and India

**Auspicious Days in our Political Life**

Two auspicious dates loom large in Jaffna's calendar in the recent history of the Civil War in Sri Lanka. The dates we refer to, are *March 5, 1987* when Argentina filed resolution in Geneva, "faulting Sri Lanka on human rights issues of the present troubles in the North and East (*DN 16-3-87*) and *March 14, 1987* when the Special Envoy of Indian Prime Minister, Rajiv Gandhi, *Dinesh Singh*, M. P. called on the Sri Lankan President with a 'letter' from the Indian Prime Minister and discussed with him, according to news reports, the recent political developments between the two countries – India and Sri Lanka.

The Sri Lankan government has claimed that the *Argentina resolution* in its original form was "effectively defangued" by the deletion of objectionable-portions, and that what was adopted was "*a concensus resolution*". In this context, it is not without significance, that in an interview which National Security Minister, Lalith Athulathmudali gave to the *Sunday Island*, the Minister is reported to have said that what he had noted in the recent developments between India and Sri Lanka, was not that the Argentina resolution caused the Sri Lankan government any displeasure, but the fact that the Indian Prime Minister, Rajiv Gandhi had subsequently sent the Indian Member of Parliament, Dinesh Singh to discuss matters with President Jeyawardene. [*Uthayan* 23-3-87]. It is now a well known fact that India wanted to make it plain that any further *dialogue* is possible only:–

(a) if the military operations cease in Sri Lanka
(b) if the fuel embargo is lifted on Jaffna
(c) if the decisions of 19-12-86 are confirmed by the Sri Lankan government.

**Sri Lanka and Donor Countries**

*The Argentina Resolution,* passed in Parliament on 12-3-87, whether it was 'a concensus resolution' or 'a defangued resolution' revealed with painful clarity, an unpalatable truth that the relations of Sri Lanka with many of the donor countries may have been cordial but yet distant in the light of a 'War' in Sri Lanka that has taken (with the aid of mercenaries) 5000 lives in Sri Lanka since July 1983 and which in terms of the national budget is consuming Rs. 15,000 million for defence alone. Even in regard to the deployment of mercenaries, there has been reportedly some embarassing situations.

Addressing the Ambassadors accredited to Colombo by the donor nations at a dinner on 16-3-87, Finance Minister Ronnie de Mel has discreetly avoided, according to news reports, all references to "terrorism" and its implications but underscored as the prime source of conflict, "social and economic factors".

Acting Foreign Minister, Tyronne Fernando briefed on 13-3-87, the day after the Geneva Resolution was passed, a gathering of *foreign diplomatic missions, UN Agencies* and more importantly the *Non-Government Organisations* (NGO's) working in Sri Lanka. [For, according to some news reports the NGOs were at the receiving end of much of retaliatory comments at the Geneva UN Human Rights Commission Sessions, for their highlighting some human rights violations in Sri Lanka.] A severe drought, according to the Minister had seriously affected 80,000 families in 12 districts. The relief prayed for, is Rs 350 million over a period of six months.

**The Fuel Embargo**

The only way in which you can mean anything to another human being is to share his feelings. An instance in point is the decision taken by the government on 21-2-87 to relax the fuel embargo imposed on Jaffna on 2-1-87.

But service personnel who were deployed for duty at the army camps at the *Jaffna Fort, Palaly* and *Kankesanthurai Harbour View Hotel,* to distribute 'permits' for the issue of petrol and diesel as from 21-3-87 to those eligible for them, were according to reports, compelled to cool their heels at the army posts, as no one turned up on Saturday 21-3-87, – the day announced for the distribution of the permits, to obtain their allotted requirements.

*A protest demonstration* was staged instead, at which women constitute a large segment [fuel shortage affected the housewife more than anyone else] The purpose of the demonstration on 22-3-87 was to protest not merely against the non-availability of a basic commodity essential for the maintenance human life, but against a posture adopted by the government to bring the distribution of such an essential commodity under a military regimen. The destribution of pensions the redeeming of jewellery pawned by farmers at Peoples' Banks in lieu of loans for Agricultural purposes are all matters that are under civilian administration. Democracy can be put back in a country only on the rails of a civil administration. It cannot run on the track of a military administration – we find, entails developing a remarkable regimen of physical conditioning before a citizen attempts to get his permit.

**The Palk Strait on either side**

There is considerable befuddlement in Jaffaa about the Sri Lankan government's continuance of the policy of a 'military solution' to the Tamil problem, and the Indian hardline as reflected particularly in the speeches of *Indian State Minister Natwar Singh* (one of the Indian mediators) in the Lok Sabha. On both sides of the Palk Strait, the picture at the moment appears to be least propitious for a PEACE settlement. There has been a serious confrontation in the early hours of 23-3-87 in the Jaffna town. Details are yet to be known.

Indian Foreign Minister Natwarsingh in answer to certain questions from Tamil Nadu protagonists of the Tamil cause in the Lok Sabha has said dourly:–

> "If certain things are going to happen (in Sri Lanka) this country and people cannot possibly stay quiet."

Minister Natwar Singh has however ruled out completely 'military intervention as it would give scope for very serious repercussions.

National Security Minister Lalith Athulathmudali underscoring Sri Lanka's 'military advantage' and the success he already has in sight, of a "military solution" said in Parliament, during the debate on the extension of the Emergency:–

> "We can press home a military advantage and the LTTE knows they cannot win militarily. They have to come to the negotiating table and it is then that the elusive political solution could be found."

The Sri Lankan members of Parliament have expressed mixed feelings on the political trend of events in Sri Lanka, particularly in the light of the recent posture taken by India. Articulating a sense of disillusionment was a member of the Opposition who expressed the fears reflected in an aricle by Professor A. J. Wilson to an Indian paper, that Mr. Chelvanayakam had envisaged a time when Sri Lanka may become part of an Indian Federation. He (Mr. Chelvanayakam) had also said, according to Prof. Wilson, that the country, in such an eventuality would be representated as two units.

**A Change of Mood?**

The political scenario in Sri Lanka Today [with India in the back drop], is simmering. *The Suuday Observer* of 22-3-87 flashes the headline news that Indian Prime Minister Rajiv Gandhi has now taken *under his charge* "the Tamil issue", as he finds now that he has not been given a balanced picture by the Indian 'mediators' and that his message to President Jeyawardene recently sent through Special Envoy Dinesh Singh was not correctly "set out" in the Indian Lok Sabha. [It is well known that Foreign Minister Natwar Singh has recently expressed some strident sentiments on Sri Lanka at the Lok Sabha].

Whatever the new development may be, it is good to find Sri Lanka coming to terms with her giant neighbour and gearing up to a new round of PEACE "Talk" – Just "standing up to the terrorists" is a pre-occupation which is a total reversal of what India [and with India, many other countries of the world have felt, about the 'Tamil problem', in Sri Lanka.

The immediate problem before the Sri Lankan government is to lift the "economic blockade" on Jaffna without any "blocks" (military or otherwise) which would tend to diminish the propriety rights of the Jaffna people to obtain a commodity necessary to maintain life The other steps for PEACE could be considered if only the first step is *dourly* taken.

SERVICE OF THANKSGIVING

A Service of Remembrance and thanksgiving
for the life of
**Mrs. Christianal Manoranjitham Sellathurai**
of Urumpirai
will be held at Erlalai North, C. S. I. Church
on
Saturday the 4th April 1987 at 9. 30. a. m.
"You are Welcome"

"Jeba-Illam"
Erlalai North
Erlalai

V. A Thurairajah – Uduvil.
V. B. Selvaratnam – Erlalai North.
(Brothers)

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/64/News/87.*

Printe for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatna Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 27th March 1987 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna